රෙජිස්ට්‍රාර්/අධ්‍යක්ෂ ජනරාල්:
பணிப்பாளர் நாயகம்.'.பதிவாளஇ } 011-2864483
Director Genaral/Registrar

අධ්‍යක්ෂ
பணிப்பா } 011-2888424
Director

සහකාර අධ්‍යක්ෂ
உதவி பணிப்பாளர் } 011-2884612
Asst. Director

කාර්යාලය
அலுவலகம் } 011 -2877376
Office

ෆැක්ස් :
தொலை நகல } 011-2884612
Fax

මගේ අංකය
எனது இல. } VSSO/NGO/MOI CIRCULAR/01
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2022.12. 22
Date

මහජන ආරක්ෂක අමාත්‍යාංශය
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
**Ministry of Public Security**

**රාජ්‍ය නොවන සංවිධාන පිළිබඳ ජාතික ලේකම් කාර්යාලය - 15 වන මහල, සුහුරුපාය, බත්තරමුල්ල.**
அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகம் – 15ஆம்மாடி சுஹுருபாய பத்தரமுல்ல.
**National Secretariat for Non-governmental Organizations - 15th Floor, Suhurupaya, Battaramulla.**

විද්‍යුත් තැපැල් மின் அஞ்சல் E-mail:ngosecretariat.gov@gmail.com

சுற்றறிக்கை இல: 08

அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு,
அனைத்து மாவட்ட அரச சார்பற்ற இணைப்பாளர்களுக்கு,

**தன்னார்வ சமூக சேவைகள் அமைப்புகளையும், அரச சார்ப்பற்ற அமைப்புகளையும் மேற்பார்வையும், கண்காணிப்பும்**

01. *தன்னார்வ* சமூக சேவைகள் அமைப்பு (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கு)களுக்கான 1980 இலக்கம் 31ஐ கொண்ட சட்டத்தின் 2(2) பிரகாரம் அனைத்து மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதி உதவி பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

02. மேற் கூறப்பட்ட சட்டத்தில் குறிப்பிட்டவாறு 2.(4) பிரதி உதவி பதிவாளர்கள் தமது அதிகாரத்திற்குட்பட்டு செயற்படுகின்ற அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பாக பதிவு செய்வற்கும், அத்துடன் கண்காணிப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

03. *தன்னார்வ* சமூக சேவைகள் அமைப்புகள் அரச சார்பற்ற அமைப்புகளை பதிவு செய்வது தேசிய மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் பிரதேச மட்டங்களாவன 03 கட்டங்களாக செயற்படுவதுடன் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட அமைப்புகள் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிக்கு தமது அமைப்பின் வருடாந்த செயற்பாட்டு திட்டத்தையும், முன்னேற்ற அறிக்கையையும் முன்வைக்க வேண்டும்.

04. அரச சார்பற்ற அமப்புகள் தொடர்பான தேசிய செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தேசிய மட்டத்திலான அனைத்து *தன்னார்வ* சமூக சேவை அமைப்புகள் தங்களது அமைப்பின் வருடாந்த செயற்பாட்டு அறிக்கையை அரச சார்ப்பற்ற அமைப்புகள் தொடர்பான தேசிய செயலகத்திற்கு அனுப்ப வேண்டும். தலைமை அலுவலகத்தினால் அவ் அமைப்புகளின் வருடாந்த செயற்பாட்டு திட்டத்தை மேற்பார்வை செய்வதற்காக அம் மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான இணைப்பாளருக்கு அனுப்பப்படும்.

05. அரச சார்பற்ற அமைப்புகள் மூலம் தமது அமைப்புகளின் காலாண்டு அறிக்கையினை (அனுமதிக்கப்பட்ட மாதிரிக்கமைய ஒழுங்கமைக்கப்பட்ட) பிரதான அலுவலகத்திற்கு பிரதியொன்றுடன் தங்களது மாவட்ட அரச சார்ப்பற்ற அமைப்புகளுக்கான இணைப்பாளரிடம் வழங்கப்பட்டுள்ள மாதிரியின் குறிப்பிட்ட திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ அனுப்ப வேண்டும்.

அரச சார்ப்பற்ற அமைப்புகளுக்கான இணைப்பாளரினால் மாவட்ட மட்டத்தின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்த பின் அம் மாவட்டத்தின் மாவட்ட செயலாளரின் சிபார்சுடன் அரச சார்ப்பற்ற அமைப்புகள் தொடர்ப்பான தேசிய செயலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

மேலும் மாவட்ட மட்டத்திலான முன்னேற்றத்தை முன்வைக்கும் போது அவ் அமைப்பின் கருத்திட்டங்களை மேற்கொள்ளும் பங்குதார அமைப்புகள் இருப்பின் , அவ் அமைப்புகள் மாவட்ட இணைப்பாளரின் ஊடாக பிரதான அலுவலகத்திற்கு அறிக்கைகள் அனுப்ப வேண்டும். ( அனைத்து பங்குதார அமைப்புகளும் 1980 இலக்கம் 31ஐ கொண்ட தொண்டர் சமூக சேவைகள் அமைப்புகள் பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.)

06. மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து *தன்னார்வ* சமூக சேவைகள் அமைப்புகளும் தமது அமைப்பகளின் வருடாந்த செயற்பாட்டு திட்டங்களையும், முன்னேற்ற அறிக்கையினையும் மாதிரி பத்திரங்களில் குறிப்பிடப்படுள்ள திகதிக்கோ அல்லது அதற்கு முன் மாவட்ட அரச சார்ப்பற்ற இணைப்பாளருக்கு அனுப்ப வேண்டும்.

07. பிரதேச ரீதியாக பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து *தன்னார்வ* சேவைகள் அமைப்புகளும் தமது அமைப்பின் வருடாந்த செயற்பாட்டு திட்டத்தையும், முன்னேற்ற அறிக்கையையும் தங்களது பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

சஞ்ஜீவ விமலகுணரத்ன
பணிப்பாளர் நாயகம்.'.பதிவாளர்

பிரதி: பதிவு செய்யப்பட்ட அனைத்து அரச சார்ப்பற்ற அமைப்புகள் - தயவு.செ.க.கொ.அத்துடன் தே.ந.க